1980 ஜூலை 26]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படுமோ, அவ்வளவு விரைவில் மேற்கொள்ள முயற்சிகள் செய்யப்படும்.

மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம்.

¬ **வினா எண் 53—திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் எப்பொழுது முதல் செயல்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மன்னார்குடி தாலுக்கா மூவா நல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கேட்டிருப்பது எப்பொழுது முதல் செயல்படும் என்று, ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, திரைப்பட விளம்பரம் மாதிரி விரைவில் செயல்படத் துவங்கும் என்று சொல்லி விட்டார். எப்போது என்பதை சரியாகச் சொல்ல இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

வீரசோழனாற்றில் திருகு மதகு கட்டும் திட்டம்.

* **வினா எண். 54—திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் எடக்குடி எல்லையில் வீரசோழனாற்றில் 79/12 மைல் திருகு மதகு கட்டும் திட்டம் இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை துவங்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) வீரசோழனாற்றில் 79/1 மைலில் ரெகுலேட்டர் கட்டுவதற்கான திட்டம் ரூ. 3 லட்சத்திற்கு தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வேலையை காவிரி டெல்டா பகுதியை நவீனமாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக, 1980-81-ம் நிதி ஆண்டில் எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.